மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.
**முன்னிலை : திரு.A. சரவண செந்தில்குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
போடிநாயக்கனூர்.
திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீசோபகிருது வருடம் வைகாசி மாதம் 31-ம் நாள்
2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் நாள் புதன்கிழமை.

**IA.No.5/2022 in OS.No.61/2020.**

**Original Suit CNR No.TNTH12-000172-2020.**

1. பி.சீனியம்மாள்
2. பி.பாஸ்கரன்
3. பி.செந்தில்குமரன் என்ற குமரன் ... மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

// எதிர் //

எம்.அய்யம்மாள் ... எதிர்மனுதாரர் / வாதி

இம்மனு 23.03.2022-ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 26.04.2023ம்தேதி இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.வேங்கையா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.அன்பரசு அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதி விசாரணைக்குப்பின் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

**உத்தரவு**

**1)** மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இம்மனுவில் கண்ட காரணத்திற்காக அசல் வழக்குரையை தள்ளுபடி செய்யக்கோரி மனுதாரர்களால் இம்மனு Under Order 7 Rule 11 (a, d) CPC-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

**2)** மனுச்சொத்தானது மனுதாரர்களுக்கும் அவர்களது தாயாரான 1ம்பிரதிவாதிக்கும் 3ம்பிரதிவாதிக்கும், வாதியின் கணவரான மனோகரனுக்கும் மற்ற இரு சகோதரர்களான இறந்துவிட்ட அய்யப்பன், பிரபாகரன் ஆகியோர்களுக்கு 1975ம் ஆண்டு

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.14 11:25:35 +0530

ஆவணத்தின்படி பூர்வீகப்பாத்தியப்பட்டது. மனுதாரர்களின் குடும்ப சூழ்நிலையின் காரணமாக தர்மர் என்பவருக்கு ஈடுகடன் எழுதிக்கொடுத்து அதற்கு முறையாக வட்டி செலுத்தி வந்தநிலையில் எதிர்மனுதார்/வாதி மனுதாரர் உடன்பிறந்த சகோதரரான மனோகரனை 28.06.1985ம்தேதியில் திருமணம் செய்துகொண்டு 2ம்மனுதாரரும் அவரது சகோதரரான மனோகரனை 28.06.1985ம்தேதியில் திருமணம் செய்துகொண்டு தர்மர் என்பவருக்கு ரூ.20,500/-க்கான ஈடுகடன் அசலை 24.02.1989ம்தேதியில் எதிர்மனுதாரர் தனது பெயரில் தர்மரிடமிருந்து ஈடுமேடோவர் எழுதிப்பெற்றிருந்தார். பின்னர் ஈடுபத்திரம் 1ம்பிரதிவாதியினையும், 2ம்மனுதாரரையும், மனோகரன், பிரபாகரனையும் கட்டுப்படுத்தக்கூடியதாக இருந்துவந்து வாதி ஈடுமேடோவர் பெற்ற காரணத்தினால் வாதிக்கு வட்டியினை தவறாது செலுத்தி வந்ததாகவும், வழக்குச்சொத்தினை ரூ.20,500/-ற்கு 21.03.1986ம் தேதியில் தர்மர் மனுதாரர்களிடமிருந்தும், எதிர்மனுதாரர்/வாதியின் கணவர் மற்றும் லேட்.பிரபாகரன் ஆகியோரிடமிருந்தும் ஈடுகடன் பெற்றதை வழக்குரை 1ம்லக்க ஆவணம் மூலமாக வாதி 24.02.1989ம்தேதியில் ஈடுமேடோவர் எழுதிப்பெற்றுள்ளதை மனுதாரர்கள், வாதியின் கணவர் மற்றும் பிரபாகரன் ஆகியோர்களும் சேர்ந்து 24.02.1989ம்தேதியிலிருந்து முறைப்படி வட்டி செலுத்தி வந்து 2ம்லக்க ரசீது ஆவணம் வாயிலாக எதிர்மனுதாரர்/வாதிக்கு தொகை செலுத்தப்பட்டுவிட்டது என்றும், 01.12.2005ம்தேதியில் வழக்குரை 2 ஏக்கர் 80 செண்டு நிலத்தில் 1, 3ம்பிரதிவாதிகள் தங்களுக்குரிய 5ல் 1 பாகமான 56 செண்டு நிலத்தையும் எதிர்மனுதார் /வாதி மற்றும் எதிர்மனுதாரர்/வாதியின் கணவர் மனோகரன் அறிய மனுதாரருக்கு பாகபாத்திய விடுதலைபத்திரம் எழுதிக்கொடுத்து சுவாதீனம் ஒப்படைத்துவிட்டதன்போில் மனுதாரருக்குரிய 56 செண்டு நிலத்துடன் சேர்த்து அனுபவித்து வருவதாகவும் மேற்படி ஆவணத்தினை Null and void என்று கூறுவதற்கு எவ்வித சட்ட தகுநிலையும் இல்லை. எதிர்மனுதாரர் வழக்குரைச்சொத்து மூதாதையர் வழிச்சொத்து என்று ஒப்புக்கொண்டுள்ள நிலையிலும், தர்மருக்கு ஈடுகடன் பத்திரம் எழுதிக்கொடுத்தவர்கள் அனைவரையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்திருக்க வேண்டும் என்றும், தர்மர் பெயரில் உள்ள ஈடுகடன் பத்திர அசலையும், ஈடுமேடோவர் அசல் பத்திரங்களை வழக்குரையுடன் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், வழக்குரை 3 முதல் 8 லக்க

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.14 11:25:42 +0530

ஆவணங்களுக்கும் வழக்குரை 1ம்லக்கச்சொத்திற்கம் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், வழக்குரை 1ம்லக்க ஆவணத்தின்போில் பாிகாரம் கோரவேண்டுமெனில் முதல்நிலை தீர்ப்பாணை பாிகாரம் கோர வேண்டும் என்றும், காலவரையரை கடந்து தாக்கல் செய்துள்ளதாலும், வியாஜ்ஜியமூலமற்ற நிலையில் அசல்வழக்கினை தாக்கல் செய்துள்ளதாலும் வழக்குச்சொத்தின் உண்மையான உடைமையுாிமையாளா்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைகள் கோாி வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்று Settled Law இருக்க அசல்வழக்கில் நிரந்தர உறுத்துக்கட்டளைப்பாிகாரம் கோாி வழக்கு தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல. எனவே அசல்வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று மனுதாரா்கள்/பிரதிவாதிகள் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளாா்கள்.

3) <u>எதிா்மனுதாரா்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்.</u>

எதிா்மனுதாரா் /வாதி தரப்பில் கடந்த 07.05.1992ம்தேதிய ஆவணத்தை ரத்து செய்ததது செல்லாது என்று இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் மேற்படி அசல்வழக்கு செல்லாது என்று மனுதாரா்கள் /பிரதிவாதிகள் தரப்பில் மனுதாக்கல் செய்துள்ளனா் என்றும், வழக்குச்சொத்து மற்றும் பிற சொத்துக்கள் அடமானம் வைக்கப்பட்டு பின்பு தா்மாிடமிருந்து மீட்டெடுத்ததாக ஒப்புக்கொண்டுள்ள நிலையில் 1989ம்ஆண்டில் எதிா்மனுதாரா் /வாதியிடம் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி மனுதாரா்கள்/பிரதிவாதிகள் தொகையை தீா்க்க வரவில்லை என்றும், மேலும் மனுதாரா்கள்/பிரதிவாதிகள் 2005 மற்றும் 2011ம் ஆண்டு முதல் ஆவணங்களை போலியாக உருவாக்கியுள்ளனா் என்றும், கடந்த 24.04.2020ம் தேதியன்று மனுதாரா்கள்/பிரதிவாதிகளுக்கு எதிா்மனுதாரா் /வாதி சட்டப்பூா்வ நோட்டீசு அனுப்பியதாகவும் அதற்கு 02.06.2020ம்தேதிக்குள் பதில் நோட்டீசை அனுப்பியதாகவும் அதனை எதிா்மனுதாரா் வாங்க மறுத்துவிட்டதாக கூறியுள்ளது தவறானது என்றும், மேற்படி மனுதாரா்கள்/பிரதிவாதிகள் போலியான ஆவணத்தை உருவாக்கியுள்ளனா் என்பது பற்றி மாவட்ட கண்காணிப்பாளாிடம் புகாா் கொடுத்ததற்கு காவல்துறை கண்காணிப்பாளா் அவா்கள் சிவில் நீதிமன்றத்தினை அணுகி பாிகாரம் தேடிக்கொள்ளமாறு தொிவித்ததால் அசல்வழக்கினை தாக்கல் செய்து

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.14 11:25:50 +0530

மனுதாரா்கள்/பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் அனுப்பியதற்கு மனுதாரா்கள்/பிரதிவாதிகள் ஆவணங்களை போலியாக உருவாக்கி 07.05.1992ம்தேதியிட்ட ஆவணத்தில் எதிா்மனுதாரா/வாதியின் கையொப்பத்தை இட்டுள்ளனா் என்றும், எனவே போலி மீட்டெடுப்பை ரத்து செய்து மனுதாரா்கள்/பிரதிவாதிகள் மனுதாரருக்க வட்டி மற்றும் வட்டியுடன் ரூ.25500/– செலுத்துமாறு உத்தரவிடுவது தொடா்பாக நிவாரணம் கோாி வழக்கு தொடுத்துள்ளநிலையில் வழக்கு முடியும்வரை யாரும் வழக்குச்சொத்தினை வில்லங்கப்படுத்தக்கூடாது என்றும், வழக்குச்சொத்திற்கு சாியான முத்திரைக்கட்டணம் செலுத்தியுள்ளதாகவும் எனவே மனுதாரா்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள மனுவினை ரத்து செய்து உத்தரவிடவேண்டும் என்று கூறியுள்ளாா்.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

6) <u>பிரச்னைக்கான தீர்வு:</u>

இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டன. மனு மற்றும் பிராது சங்கதிகள் பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் மனு சொத்து "இந்த மனுவின் எதிர்மனுதரரான அசல் வழக்கின் வாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது" என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்களான வழக்கின் வாதிகள் தர்மர் என்பவருக்கு 21.03.1986–ஆம் தேதியில் ஈடு பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளனர் என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு தர்மர் பெயருக்கு ஏற்பட்ட ஈடுபத்திரத்தை இந்த மனுதாரர்/பிரதிவாதி 24.02.1989–ஆம் தேதி ஈடுமேடோவர் பத்திரம் மூலமாக மேடோர் பெற்றுள்ளார் என்பதும் இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

7) எதிர்மனுதாரரான வாதி தரப்பில் வாதி கடந்த 24.02.1989–ஆம் தேதி பெற்றுக் கொண்ட ஈடுமேடோர் பத்திரம் தற்போது வரை நிலுவையில் இருந்து வருவதாகவும் மேற்படி ஈடுமேடோவர் பத்திரத்தை உரிய தொகை செலுத்தி மனுதார்களான பிரதிவாதிகள் மீட்கவில்லை என்றும் அதன் காரணமாக எதிர்மனுதாரரான வாதி மேற்படி ஈடுமேடோவா் பத்திரம் நிலுவையில் இருக்கும் நிலையில் வழக்கு சொத்தைப் பொறுத்து மனுதாரர்களான பிரதிவாதிகள் மோசடியான

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.14 11:25:59 +0530

ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும் இதுகுறித்து எதிர்மனுதாரர் மனுதாரர்களிடம் கேட்டபோது 07.05.1992–ஆம் தேதியில் இந்த எதிர்மனுதாரர்/வாதியால் எழுதிப் பெறப்பட்ட ஈடுமேடோவா் பத்திரம் உரிய தொகை செலுத்தி ரசீது பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறி மோசடியான ஆவணம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்பது தெரிய வந்ததாகவும் எனவே அவ்வாறு 07.05.1992–ஆம் தேதியில் மனுதாரா்களான பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ளதாக கூறும் ஈடுமேடோவா் ரத்து பத்திரமானது சட்டப்படி செல்ல தக்கது இல்லை என விளம்புகை பரிகாரம் கோரியும் ஈடுமேடோவர் தொகையான ரூபாய் 20,500 மனுதாரா்களான பிரதிவாதிகள் இந்த எதிர்மனுதாரரான வாதிக்கு செலுத்த உத்தரவிட வேண்டும் என்றும் மனுசொத்தைப்பொறுத்து வில்லங்கங்களுக்கு உட்படுத்தாமல் இருக்கத்தக்க வகையில் எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகளுக்கு எதிராக இடைக்கால தடை உத்தரவு பரிகாரம் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

**8)** ஆனால் மனுதாரர்கள் தங்கள் மனு மற்றும் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை ஆகியவற்றில் இந்த எதிர்மனுதாரர்/வாதி வழக்குரையில் கூறியுள்ள 24.02.1989–ம் தேதிய ஒத்தி ஈடுமேடோவா் பத்திரத்திற்குரிய வட்டியை முறையாக செலுத்தி வந்து 07.05.1992–ஆம் தேதியில் முழுத்தொகையும் செலுத்தி தீர்க்கப்பட்ட நிலையில் மேற்படி ஈடுபத்திரமானது ரத்து செய்து பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதனை மறைத்து எவ்வித வழக்கு மூலமும் இல்லாமல் சட்டப்படியான கால வரையரை கடந்து எதிர்மனுதாரர்/வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையானது உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 11 உட்பிரிவு ஏ மற்றும் டி ஆகியவற்றின் அடிப்படையில் நிராகரிக்க தக்கதாக உள்ளது என்றும் எனவே மனு அனுமதிக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டுள்ளது.

**9)** இருதரப்பு வாதம் பரிசீலனை செய்யப்பட்டதில் மனு சொத்தைப் பொறுத்து எதிர்மனுதாரர்/வாதி பெயருக்கு 24.02.1989–ஆம் தேதி ஈடுமேடோவர் பதிவு ஆவணம் ஏற்பட்டுள்ளது என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி ஈடுமேடோவர் பத்திரம் 07.05.1992 ஆவணத்தின்படி ரத்து செய்யப்பட்டு விட்டதாக கூறப்பட்டுள்ள நிலையில்

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.14 11:26:06 +0530

எதிர்மனுதாரர்/வாதி மேற்படி ஆவணமானது மோசடியாக எதிர்மனுதார்/வாதியின் கையெழுத்தை போலியாக செய்து உருவாக்கப்பட்ட ஆவணம் என்றும் எனவே மேற்படி ஆவணம் சட்டப்படி நிலைக்கத்தக்கதாக இல்லை என்றும் அதன் காரணமாக மேற்படி ஆவணம் சட்டப்படி நிலைக்கதக்கது இல்லை என விளம்புகை செய்ய கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

**10)** எனவே வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய விவரமாக 07.05.1992–ஆம் தேதிய ஒத்தி ஈடுமேடோவர் ரத்து பத்திரம் உண்மையானதுதானா என்பது பற்றிய இரு தரப்பு சாட்சிய விசாரணை மூலமாக முடிவு காண வேண்டியது சட்டப்படியான அவசியமாக உள்ளது என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே இதுகுறித்து எழுவினா வனைந்து இருதரப்பு சாட்சியங்கள் விசாரணைக்கு முன் வைக்கப்படும் பட்சத்தில் மட்டுமே தீர்வு காணப்பட வேண்டிய சூழ்நிலை உள்ள நிலையில் மனுதாரர்கள் பிரதிவாதிகள் தரப்பில் இவ்வழக்கை தாக்கல் செய்ய எவ்வித வழக்கு மூலமும் இல்லை என்பதாக கூறி அதன் காரணமாக வழக்குரை நிராகரிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ள பரிகாரம் ஏற்புடையதாக இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

**11)** மேலும் மனுதாரர்கள் தரப்பில் இவ்வழக்கு சட்டப்படியான கால வரையரை கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தால் வழக்கு தாக்கல் செய்ய சட்டப்படி வாதி தடை செய்யப்பட்டுள்ளார் என்றும் அதன் காரணமாக இவ்வழக்குரையானது உரிமைகள் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 11 உட்பிரிவு ஏ மற்றும் டி–ன்படி நிராகரிக்கத்தக்கதாக உள்ளது என்று கூறியுள்ள வாதம் குறித்து பரிசீலனை செய்ததில் ஒரு வழக்கில் கால வரையரை சட்டம் குறித்து தீர்வு காணப்பட வேண்டிய விவரமானது சட்டம் மற்றும் பொருமை கலந்த விஷயமாக உள்ள நிலையில் அதன் காரணமாக ஒரு வழக்குரை நிராகரிக்க இயலாது என்பதாக மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் முன் தீர்ப்புகள் பிறப்பித்துள்ளது என்பதை இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

**12)** எனவே மனுதாரர் கோரியுள்ளபடி எதிர்மனுதார்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையானது உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 11 உட்பிரிவுகள் a மற்றும் d–ன் படி நிராகரிக்கத்தக்கதாக உள்ளது என

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.14 11:26:28 +0530

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூறியுள்ள வாதம் ஏற்புடையதாக இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனு அனுமதிக்கத்தக்கதாக இல்லை என தீர்வு காணப்படுகிறது

**13) <u>இறுதியாக</u>,**

| | |
|---|---|
| 1. | இடைநிலை மனு எண். 5/2022 தள்ளுபடி செய்யப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின் 2023ம் ஆண்டு ஜுன் 14-ம் நாள் இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.14 11:26:19 +0530

"

***மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),***
***போடிநாயக்கனூர்.***